## உள்ளூர் ஆட்சிச் சேவை

### தாதி உதவித் தலைமைப் (மேட்ரன்) பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபை அலுவலகத்தினால் வரவேற்கப்படுகின்றன.

2. இப்பதவிக்குரிய வருடாந்த வேதனம் வருமாறு :—
ரூ. 2,460—9× 120—3,540. வருடாந்தம் ரூ. 2,820 பெறுமுன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையுண்டு.

3. தகமைகள் :—

(அ) வயது : 1966.6.21 ல் 40 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். (உள்ளூர் ஆட்சிச் சேவையில் இல்லாதவர்களுக்கு);

(ஆ) விண்ணப்பதாரர்கள் பயிற்றப்பட்ட பொதுசுகாதார தாதிகளாக இருத்தல் வேண்டும். பொது சுகாதார தாதியியலின் கோட்பாடுகளிலும், செய்முறைகளிலும் உள்ள பயிற்சி வகுப்புகளில் பயின்றிருக்கவேண்டும். சுகாதார சேவைகள் அதிகாரியால் வினியோகிக்கப்பட்ட பொது சுகாதார தாதியியல் சான்றிதழை உடைமையாகக் கொண்டிருத்தல் வேண்டும். (சான்றிதழின் பிரதி (மூலப்பிரதி அல்ல) இணைக்கப்பட வேண்டும்.)

4. நியமனத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி, கொழும்பு மாநகரசபையின் பொது சுகாதார இணைக்களத்துக்கு முதலில் நியமிக்கப்படுவார். கொழும்பு மாநகர எல்லைகளுக்குள் அவர் வசிக்க வேண்டியதாகும்.

5. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச்சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1966.6.21 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிடப்படும் படிவத்தில் பின்வரும் விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

" 9 (அ) பயிற்றப்பட்ட பொது சுகாதார தாதியா ?
(ஆ) தாதியியலில் பெற்ற தகமைகளின் விபரங்கள் ".

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரச் சபைத் தலைவருக்கு முகவரியிடப்படவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் நேரடியாக அனுப்பப்படக்கூடாது.

8. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித்தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ.ஆ.சே.அ.ச.

உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை,
த.பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு மே மீ

6–199—3.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,698

---

## காங்கேசன்துறை பட்டின சபை

### காவற்காரர் பதவி

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **வேதனஅடிப்படை** : வருடாந்தம் ரூ. 540—30 × 8—24 × 1—ரூ. 804. வருடாந்தம் ரூ. 636 உம் வருடாந்தம் ரூ. 732 உம் பெறுமுன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் உண்டு.

3. **வேண்டிய தகமைகள்** : (அ) வயது : 16.6.66 ல் 25 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்குக் கூடாமலும் இருக்கவேண்டும்.

(ஆ) விண்ணபதாரர்கள் தமிழில் அல்லது சிங்களத்தில் 5 ம் வகுப்புச் சித்தியடைந்திருப்பதுடன் நல்ல உடற்றகுதியுடையவர்களாயும் இருத்தல் வேண்டும். இரண்டாவது மொழியில் வேலை செய்யத்தக்க அறிவு அவர்களுக்கு இருத்தல் வேண்டும்.

4. இவ்வர்த்தமானியின் 4 வது பகுதியின் ஆரம்பத்தில் பிரசுரமாகியிருக்கும் உள்ளூராட்சிச்சேவையிலுள்ள பதவிகளில் நியமனஞ் செய்வதற்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டு பிரசுரமாகியிருக்கும் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 7.6.66 க்குப் பிந்தாமல் காங்கேசன்துறை பட்டண சபைத் தலைவருக்குக் கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் அனைத்தும் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்படும். முடிவு திகதியின் பின் 3 நாட்களுக்குள் விண்ணப்பம் கிடைத்தமை அறிவித்தல் கிடைக்கப்பெறாத எந்த ஒரு விண்ணப்பதாரரும், உடனடியாகவே காங்கேசன்துறை பட்டணசபைத் தலைவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். இந்த ஏற்பாட்டிற்கிணங்க நடக்கத்தவறின், கருத்துக்கெடுக்கும் கோரிக்கையை விண்ணப்பதாரர் இழக்கவேண்டியுள்ளது.

ஆ. வ. சதாசிவம்,
தலைவர்.

காங்கேசன்துறை ப. ச. அலுவலகம்,
1966 ம் ஆண்டு மே மீ 6 ந் உ.

6–195—3.6.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,698

---

# துணைவிதிகள்

## மாத்தளை மாநகர சபை

### மாநகர சபைக் கட்டளைச் சட்டம்

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 267 ஆம், 272 ஆம் பிரிவுகளின் கீழ், மாத்தளை மாநகர சபையால் ஆக்கப்பட்டு, இக்கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

கொழும்பு,
1966 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 2 ந் உ.

### மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் காணி, கட்டடம் வைத்திருக்கும் உடமையாளர்களின் பெயர்களையும் விலாசங்களையும் பதிவு செய்வதற்குக் கவனிக்கவேண்டிய துணைவிதிகள்

1. அரசினர் வர்த்தமானப் (கசெற்) பத்திரிகையில், இந்தத் துணைவிதிகள் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாத காலத்திற்குள், மாத்தளை மாநகர சபை எல்லைக்குள், ஒரு காணி, அல்லது கட்டடம் வைத்திருக்கும் உடைமையாளர் ஒவ்வொருவரும், மாநகர சபைக் கமிஷனருக்குப் பின்வரும் விபரங்களைக் கொடுத்தல் வேண்டும்—

(1) இங்கே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்ட பிரகாரம் ஓர் பிரசித்த நொத்தாரிசுவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட காணி அல்லது கட்டடம் சம்பந்தமான உரிமை உறுதியின் தொகுப்பு ;

(2) பின்வரும் விபரங்கள் கொண்ட ஓர் அறிக்கை.—

(அ) குறிக்கப்பட்ட காணி அல்லது கட்டடத்தின் வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், காணி அல்லது கட்டடத்தின் விவரணம் ;

(ஆ) காணி அல்லது கட்டடத்தின் எல்லைகள், காணி அல்லது கட்டடத்தை அத்தாட்சிப்படுத்தும் வேறு விபரங்கள் ;

(இ) உடைமையாளருக்கு, காணி அல்லது கட்டடம் சொந்தமான திகதி ;

(ஈ) உடைமையாளரின் பெயரும் விலாசமும் ;

(உ) காணி அல்லது கட்டடத்திற்குப் பங்கு உடைமையாளர் இருப்பின் அன்னாரின் முழுப் பெயரும் விலாசமும்.

2. (1) முதலாந் துணை விதியின் பிரகாரம், குறிக்கப்பட்ட ஏதாவது ஒரு காணி அல்லது கட்டடம் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட விபரங்களில் மாற்றம் உண்டாயின், காணி அல்லது கட்டடத்தின் உடைமையாளர் மாற்றம் உண்டான திகதியிலிருந்து 3 வார காலத்திற்குள், மாநகர சபைக் கமிஷனருக்கு ஏற்பட்ட மாற்றங்களை அறிவித்தல் வேண்டும்.

**(2)** மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் இருக்கும், ஏதாவதொரு காணி அல்லது கட்டடத்தின் உரித்துடைமையில், ஏதாவது மாற்றம் உண்டாயின், உரிய காணி அல்லது கட்டடத்தின் புதிய உடைமையாளர், மாற்றம் ஏற்பட்ட திகதியிலிருந்து 3 வார காலத்திற்குள், இந்த துணை விதியில் குறிக்கப்பட்ட பிரகாரம், உரிய காணி அல்லது கட்டடத்தின் உரித்துறுதியின் தொகுப்பை அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. ஒரு காணி அல்லது கட்டடம் சம்பந்தமாக, பின்வரும் விபரங்களை மாநகர சபைக் கமிஷனர், ஒரு இடாப்பில் பதிந்து பேணிவருதல் வேண்டும் :—

(அ) காணி அல்லது கட்டடம் இருக்கும் வீதியின் பெயர், அதன் வரி மதிப்பு இலக்கம் ;

(ஆ) ஒரு காணி அல்லது கட்டடத்தின் உடைமையாளரின் அல்லது பங்கு உடைமை கோருபவரின் பெயரும் விலாசமும் ;

(இ) ஒவ்வொரு உடைமையாளரினதும், உரிமை ஆரம்பிக்கப்பட்ட திகதி.

**(2)** ஏதாவதொரு காணி அல்லது கட்டடத்தின் உடைமைக்கு இருவர் அல்லது இரண்டிற்கு மேற்பட்டவர்கள், முரணுக உரிமை கோரும் சந்தர்ப்பத்தில், பிணக்குள்ள கோரிக்கைக்காரர், இடாப்பில் இப்படிக் கோருபவர்களின் பெயர்களை மாநகர சபைக் கமிஷனரின் திருப்திக்கு, உரிய காணி அல்லது கட்டடத்திற்கு, சட்டரீதியாக உரிமை உடையவரென ஒரு கோரிக்கை ஆளருக்கு தகுந்த ஓர் நீதிமன்றத்தால் தீர்ப்பு அளிக்கப் படும் வரைக்கும் பதிந்து வைத்திருத்தல் வேண்டும்.

4. துணை விதி 1 அல்லது துணை விதி 2 இன் கீழ், காணி, அல்லது கட்டடம் சம்பந்தமாக பிரத்தியேகமான பதிவுகள் பதிவதற்கு, விபரங்கள் கொடுத்த ஒவ்வொருவரும், பதிவுக் கட்டணம் ரூபா 1 கட்டல் வேண்டும்.

5. துணை விதி 3 இன் கீழ் பேணப்பட்டு வரும் இடாப்பை, நியாயமான நேரங்களில் ஒரு ரூபா கட்டணம் இறுக்கும் ஒருவருக்குப் பார்வைக்குத் திறந்து வைக்கலாம். ஆயின் இடாப்பைப் பார்வை இடுபவர், அக் காணி, கட்டடத்தில் வாசஞ் செய்பவராகவோ அக்காணி கட்டடத்தின் உடைமையாளராகவோ இருக்கக்கூடாது.

6. இத்துணை விதிகளில், சந்தர்ப்பம் பற்றி, வேறு கருத்துக் கொண்டாலொழிய "மாநகர சபைக் கமிஷனர்" என்ற பதம், மாத்தளைப் பகுதி, மாநகரசபைக் கமிஷனரைக் கருதும்.

"உடைமையாளர்" என்ற பதத்தில் பங்கு உடைமையாளரும் அடங்கும். "இடாப்பு" என்பது, 3 ஆம் துணை விதியின் கீழ்ப் பேணப் பட்டு வரும் இடாப்பாகும்.

**அட்டவணை**

**உரித்துறுதியின் தொகுப்பு**

உறுதியின் இலக்கம் : ————.

திகதி : ————.

நொத்தாரிசுவின் பெயர் : ————.

உறுதியின் விவரணம் : ————.

உத்தரவாதி : ————.

உத்தரவாதம் : ————.

எல்லைகளும் பரப்பும் : ————.

பணத் தொகை : ————.

வளவுகளின் இலக்கம் : ————.

வீதியின் பெயர் : ————.

மேலே குறிக்கப்பட்ட வளவுகள் சம்பந்தமான உரித்துறுதியின் உண்மையான தொகுப்பு என்பதை அத்தாட்சிப்படுத்துகிறேன்.

பிரக்டரும் பிரசித்த நொத்தாரிசும்.

திகதி : ————.

6–218—3.6.1966 ந் திகதிய வர்த்தமானி இல. 14,698

